மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

வரலாறு	மாதாந்தப் பரீட்சை – 2022 (ஜூலை)	
பெயர் / சுட்டெண் :-	தரம் :- 11	நேரம் :- 2 மணித்தியாலம்

கவனிக்க :

- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 17 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

பகுதி - I

01 கைத்தொழில் புரட்சி ஆரம்பமாவதற்கு உதவிய மூலப்பொருட்கள், முடிவுப்பொருட்கள், நிதி நடவடிக்கைகள் என்பவற்றை வழங்குவதில் முதலிடம் கொண்டிருந்த பிரித்தானிய நகரம்

(1) லண்டன் (2) மன்செஸ்டர் (3) பெர்மிங்ஹாம் (4) நியூஜேர்சி

02 உலகில் முதலாளித்துவ பொருளாதாரம் பரவக் காரணமாக அமைந்த பொருளாதாரத்தில் அரசின் தலையிடாக் கொள்கையை முன்வைத்தவர்

(1) நிக்கோலாய் மார்க்கியவலி (2) அடம்சிமித்

(3) ஜோஹான் கல்டுங் (4) தோமஸ்ஹோப்ஸ்

03 கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்த வளங்கள் இரண்டைக் கொண்ட விடைத்தொகுதி

(1) நிலக்கரி, கனிய எண்ணெய் (2) இரும்பத்தாது, கனிய எண்ணெய்

(3) கனிய எண்ணெய், அலுமினியம் (4) நிலக்கரி, இரும்புத்தாது

04 இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட போது கண்டியின் ஆட்சியாளனாக விளங்கிய நாயக்க வம்ச மன்னன்

(1) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (2) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

(3) ஸ்ரீ விஜய இராஜசிங்கன் (4) இராஜாதி இராஜசிங்கன்

05 கண்டி இராச்சியம் தொடர்பான தந்திரமான கொள்கையைக் கடைப்பிடித்த பிரித்தானிய ஆளுநர்

(1) பிரெட்ரிக்நோத் (2) ரொறிங்டன்

(3) தோமஸ்மெயிட்லண்ட் (4) றொபட் பிறவுண்றிக்

- பின்வரும் விடயங்களை அவதானித்து விடை எழுதுக.

A – வீரபுரன் அப்பு B – கொங்காலே கொடபண்டா

C – கெப்பட்டிப்பொல திசாவை D – கிவுலகெதர மொஹாட்டால

E - டிங்கிரால F – மடுகல்ல திசாவை

06 மேலே குறிப்பிட்டவர்களுள் பிரித்தானியருக்கு எதிரான முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமைத்துவத்தை வழங்கியவர்களைக் குறிக்கும் விடைத்தொகுதி

(1) ACF (2) CDF (3) DEF (4) ABE

07 மேலே குறிப்பிட்டவர்களுள் பிரித்தானியருக்கு எதிரான இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமைத்துவத்தை வழங்கியவர்களைக் குறிக்கும் விடைத்தொகுதி

(1) ACF (2) CDF (3) DEF (4) ABE

08 ஐரோப்பியர் பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான காணிகளை தடையின்றிப் பெற்றுக்கொள்வதற்காக காணி விற்பனைக் கொள்கையை அறிமுகம் செய்தவர்

(1) கோல்புறூக் (2) குறூ – மக்கலம் (3) டொனமூர் (4) சோல்பரி

09 கண்டி உடன்படிக்கையில் பிரித்தானிய முடியின் சார்பில் கையெழுத்திட்டவர்

(1) பிரெட்ரிக்நோத் (2) ரொறிங்டன்

(3) றொபட் பிறவுண்றிக் (4) தோமஸ்மெயிட்லண்ட்

10 ஐம்பெரும் விவாதங்களுள் புகழ்பெற்ற பாணந்துறை விவாதத்திற்கு தலைமை தாங்கிய பௌத்த பிக்குவான மிகெட்டுவத்த குணானந்தேரரின் வசிப்பிடமாக அமைந்தது

(1) அபயகிரி (2) தீபத்துராம (3) லங்காதிலக (4) கடலாதெனிய

11 அநகாரிக தர்மபால, பியதாச சிறிசேன, வலிசிங்க ஹரிச்சந்திர ஆகியோரின் பணிகளின் பொதுப்பண்பாக அமையக்கூடியது

(1) பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கிச் செயற்பட்டமை.

(2) மது ஒழிப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கிச் செயற்பட்டமை.

(3) தேசப்பற்றை வளர்க்கும் இயக்கத்துக்கு தலைமை தாங்கிச் செயற்பட்டமை.

(4) ஆரசியல் போராட்ட இயக்கங்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கியமை.

12 டொனமூர் அரசியல் யாப்பில் உள்ளதும் சோல்பரி அரசியல் யாப்பில் இல்லாததுமான பதவிகள் **முறையே**

(1) ஆளுநர், ஜனாதிபதி (2) பிரதமர், சபாநாயகர்

(3) ஆளுநர் நாயகம் , ஆளுநர் (4) ஆளுநர், ஆளுநர் நாயகம்

13 கோல்புறூக் சீர்திருத்தத்துக்கமைய தனியார் துறையினரின் வியாபார நடவடிக்கைகளுக்கு இடமளிக்கும் வகையில் அரச வர்த்தக தனி உரிமையை இல்லாதொழித்த இரு வர்த்தக பொருட்களாவன.

(1) முத்தும் யானைத் தந்தமும் (2) கறுவாவும் உப்பும்.

(3) கோப்பியும் கறுவாவும் (4) பாக்கும் தேன் மெழுகும்

14. கோல்புறூக் குழுவினால் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்கும் பொருட்டு முன் வைக்கப்பட்ட

ஆலோசனை

(1) நாட்டை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தல்.

(2) சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் என்பவற்றை ஏற்படுத்தல்.

(3) கண்டியையும் தாழ்நிலப் பிரதேசங்களையும் இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்.

(4) அரசின் வர்த்தக ஏகபோக முறையை அகற்றுதல்

15 தேசிய பாதுகாப்பு, நிதி, சட்ட நடவடிக்கைகள் ஆகிய முக்கியமான துறைகள் அரச உத்தியோகத்தர்களின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு.

(1) கோல்புறூக் 2) சோல்பரி 3) குறூ-மக்கலம் 4) டொனமூர்.

16 கோல்புறூக்கின் முக்கிய நோக்கமாக அமைந்தது

(1) மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துதல்

(2) அரச முயற்சியாண்மைகளை அதிகரித்து மக்களுக்குப் பங்காற்றுதல்.

(3) தனியார் முதலீட்டை ஊக்குவித்து பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணுதல்

(4) இலங்கை மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

17 இலங்கையில் பிரித்தானியருடைய ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களோடு தொடர்புடைய சில முக்கிய அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை இடம்பெற்ற வரலாற்றுத் தொடரொழுங்கைக் காட்டும் விடை

A பிரதேசவாரிப் பிரதிநித்துவ முறை B சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம்

C செனட் சபை D சர்வஜன வாக்குரிமை

(1) ABDC (2) ACDB (3) BADC (4) BDAC (17 X 2 = 34 புள்ளிகள்)

பகுதி - II

- **பகுதி I** இன் **முதலாம்** வினா **கட்டாயமானது.**
- **பகுதி II** இல் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக..
- எல்லாமாக **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

01 (அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தின் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) தெதுறுஓயா, கும்புக்கன்ஓயா, மின்னேரியா, பதவியா, செங்கடகல, பெட்ரிக்கோட்டை, ஹெமன்கெயில், மட்டக்களப்பு நகர், கொழும்பு, மன்னார், ஊவா-வெல்லஸ, மாத்தளை (12 புள்ளிகள்)

(ii) பிரித்தானியா, கல்கத்தா, சுயஸ்கால்வாய், சுமாத்திரர், பம்பாய், அரபிக்கடல் (6 புள்ளிகள்)

(ஆ) (I) பின்வரும் கூற்றுக்களுக்குரிய விடைகளை A,B,C,D ஒழுங்கில் தருக.

A கைத்தொழிற்புரட்சி காலத்தில் பாதுகாப்பு விளக்கினைக் கண்டுபிடித்தவர்.

B கண்டி இராச்சியத்தோடு முதன் முதலில் தொடர்புகளை ஏற்படுத்திய ஆங்கில இனத்தவன்

C இந்துசமய மறுமலர்ச்சிக்கு தலைமைத்தவத்தை வழங்கிச் செயற்பட்டவர்.

D இலங்கைத் தேசிய சங்கத்தின் முதலாவது தலைவராகச் செயற்பட்டவர்

(4 புள்ளிகள்)

A. B எனக் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(II) 1 படத்தில் காட்டப்பட்டிருக்கும் கட்டிடத்தின் பெயர் என்ன?

2. இக் கட்டிடம் எந்த நாட்டில் அமைந்துள்ளது?

3. இக்கட்டிடத்தில் இருந்து கடிதம் ஒன்றினை எழுதிய இளவரசனின் பெயர் என்ன?

4. மேற்கூறப்பட்ட மன்னன் எழுதிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்ட நாடு எது? (4 புள்ளிகள்)

(A)

(B)

(III) 01 படத்தில் காட்டப்படுபவர் யார்?

02 இவருடைய கண்டுபிடிப்பு எது?

03 இது எக்கைத்தொழிலோடு தொடர்படையது?

04 இவருடைய தாய் நாடு எது? (4 புள்ளிகள்)

பகுதி - II

02 (I) கைத்தொழில் புரட்சியின் பரவல் இடம்பெற்ற ஏனைய துறைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) கைத்தொழிற் புரட்சி பரவலடைந்த ஆசிய நாடுகள் **நான்கினைக** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பிரித்தானியாவில் கைத்தொழிற் புரட்சி முதலில் ஏற்படுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) கைத்தொழிற் புரட்சியியானது இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்திய துறைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

03 (I) பிரித்தானியர் இந்தியாவில் வர்த்தக மத்திய நிலையங்களை அமைத்த இடங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பிரித்தானியர் இலங்கையை கைப்பற்றிக்கொள்ள ஆர்வம் காட்டியமைக்கான காரணங்கள் **இரண்டு** தருக. (4 புள்ளிகள்)

(III) பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றிக்கொள்ள ஆர்வம் காட்டியமைக்கான காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) கி.பி.1848ஆம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப் போராட்டம் ஏற்படுவதற்கு ஏதுவாயமைந்த

காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04 (I) பிரித்தானியர் காலத்தில் செயற்பட்ட மிசனரிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) மிசனரிகளால் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றை வெளியிட்ட நிறுவனங்களையும் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) தேசப்பற்றை வளர்க்கும் இயத்தினால் மெற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(VI) கிறிஸ்தவ சமயப்பரவலில் இருந்து இலங்கையின் சுதேச சமயங்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள பின்பற்றிய வழிமுறைகள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05 (I) பின்வரும் ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களைக் குறிப்பிடுக.

A – 1912 B – 1920 C - 1924 (3 புள்ளிகள்)

(II) அரசியல் யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்த மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் **நால்வரைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) டொனமூர் அரசியல் யாப்பின் முக்கிய சிபாரிசுகள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

06 (I) கோல்புறூக் - கமரன் சீர்திருத்தத்தில் உருவாக்கப்பட்ட மாகாணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) அரசியல் யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கைகளை முன்வைத்த அமைப்புக்கள் **நான்கைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) கோல்புறூக் - கமரன் அரசியல் சீர்திருத்ததின் முக்கிய அரசியல் சிபாரிசுகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) பிரித்தானியரால் அறிமுகப்படுத்தப்பட்ட **இரு** வகையான வாக்குரிமைகளையும் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)


N
இந்தியன் சமுத்திரம்
Indian Ocean
ஆபிரிக்கா
Africa